மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்

முன்னிலை திரு.M.சிவராஜேஷ், B.B.A.L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02ஆம் நாள் செவ்வாய்கிழமை

இ.ம.எண்.01/2025

in

அ.வ எண்.71/2025

1.பால்ராஜ் நாடார்

2. உச்சிமகாளி ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1. வட்டாட்சியர் அவர்கள்

சாத்தான்குளம்

2. தமிழ்நாடு அரசு அதன் தூத்துக்குடி

மாவட்ட ஆட்சியர் மூலமாக ... 1, 2 எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள்

3. சுடலைமணி

4. மகாலெட்சுமி

5. மகாராஜன் ... 3 முதல் 5 உத்தேச எதிர்மனுதாரர்கள்/

3 முதல் 2 உத்தேச பிரதிவாதிகள்

இம்மனுவானது 18.11.2025 இன்று இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.R.P.T.கல்யாண்குமார் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

இம்மனுவானது இம்மனுவில் கண்ட 3 முதல் 5 எதிர்மனுதார்களை அசல் வழக்கில் 3முதல் 5 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கினை மேல் நடத்த உத்தரவிட வேண்டி மனுதாரர்களால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் அதிகாரம் 1 விதி 10(2)ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.12.02 17:30:21 +0530

**2. மனுதாரர்களின் மனுவின் சுருக்கம்:–**

2.1 தங்களின் தகப்பனாரான துரைசாமி அவர்களின் இரண்டாவது மனைவி வேலம்மாள் அவர்களுக்கு வேம்படியாச்சி என்ற பெண் மகள் இருந்து வந்தார். மேற்படி வேம்படியாச்சி கணவரான 3ம் எதிர்மனுதாரரையும், மக்களான 4, 5 எதிர்மனுதார்களையும் தனது வாரிசுகளாக வைத்துவிட்டு 07.11.2012ம் தேதியில் காலமாகிவிட்டார். மேலே கண்ட வேம்படியாச்சியின் வாரிசுகளின் முழுமையான விவரம் தங்களுக்கு தெரியாதால் மேற்படியார்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க இயலவிலலை. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. 1, 2 எதிர்மனுதார்கள் மேற்படி வழக்கினை எதிர்வழக்குரையில் தெரிவித்த பின்னரே அந்த விவரம் தங்களுக்கு தெரிய வந்தது. ஆகவே காலஞ்சென்ற வேம்படியாச்சியினை வாரிசுகளான 3 முதல் 5 எதிர்மனுதார்களை அசல் வழக்கின் 3 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிடாவிடில் தங்களுக்கு அளவிட முடியாத கஷ்ட நஷடம் ஏற்படும் என மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என்றும் நீதிமன்றம் நீதியின்பால் முடிவு செய்யலாம் என்று மேலெழுத்து செய்யப்பட்டது.

4. இம்மனுவில் தீர்மானிக்க படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியம், சான்றாவணங்கள் இல்லை.

6. தீர்வு:

மனுவானது இம்மனுவில் கண்ட 3 முதல் 5 எதிர்மனுதார்களை அசல் வழக்கில் 3முதல் 5 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கினை மேல் நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் தங்களின் தகப்பனாரான துரைசாமி அவர்களின் இரண்டாவது மனைவி வேலம்மாள் அவர்களுக்கு வேம்படியாச்சி என்ற பெண் மகள் இருந்து வந்தார் என்றும் மேற்படி வேம்படியாச்சி கணவரான 3ம் எதிர்மனுதாரரையும், மக்களான 4, 5 எதிர்மனுதார்களையும் தனது வாரிசுகளாக வைத்துவிட்டு 07.11.2012ம் தேதியில் காலமாகிவிட்டார் என்றும் மேலே கண்ட வேம்படியாச்சியின் வாரிசுகளின் முழுமையான விவரம் தங்களுக்கு தெரியாதால்

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.12.02 17:30:34 +0530

மேற்படியார்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க இயலவிலலை. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் 1, 2 எதிர்மனுதார்கள் மேற்படி வழக்கினை எதிர்வழக்குரையில் தெரிவித்த பின்னரே அந்த விவரம் தங்களுக்கு தெரிய வந்தது என்றும் ஆகவே காலஞ்சென்ற வேம்படியாச்சியினை வாரிசுகளான 3 முதல் 5 எதிர்மனுதார்களை அசல் வழக்கின் 3 முதல் 5 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிடாவிடில் தங்களுக்கு அளவிட முடியாத கஷ்ட நஷடம் ஏற்படும் என்று கூறியுள்ளதை கருத்தில் கொண்டும் இரு தரப்பினருக்கும் தங்களது வழக்கினை நிரூபிக்க ஒரு வாய்ப்புகொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மனுதாரர்களின் மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.12.02 17:30:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் – இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.12.02 17:30:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தான்குளம்.
இ.ம.எண்.1/2025இன்
அ.வ.எண்.71/2025
நேரிய/வரைவுஉத்தரவு
நாள் 02.12.2025